# மேலும் அதிகமானோர் இனவாதம் ஒரு முக்கியப் பிரச்சினை எனக் கருதுகின்றனர் - கருத்தாய்வு

***Seithi Mediacorp***, 2 April 2022

சிங்கப்பூரில் மேலும் அதிகமானோர் இனவாதம் ஒரு முக்கியப் பிரச்சினை எனக் கருதுவதாகக் கருத்தாய்வு ஒன்றில் தெரியவந்துள்ளது.

இனப் பாகுபாடு தொடர்பில் CNA, கொள்கை ஆய்வுக் கழகம் ஆகியவை கடந்த ஆண்டு இணைந்து நடத்திய கருத்தாய்வின் முடிவுகள் அதனைப் புலப்படுத்தின.

**விளம்பரம்**

கருத்தாய்வில் 21 வயதுக்கும் மேற்பட்ட சிங்கப்பூர்வாசிகளில் 2,000க்கும் அதிகமானோர் பங்கேற்றனர்.

**கருத்தாய்வு முடிவுகள்**

- **"இனவாதம் ஒரு முக்கியப் பிரச்சினை"**

2020 - 56.2%

2016 - 46.3%

தகுதிக்கு முன்னுரிமை அளிக்கப்படுவது என்பது இனம் சார்ந்ததல்ல என்றும் பங்கேற்பாளர்களில் பெரும்பாலோர் கூறுகின்றனர்.

ஒருவரின் இனம் எதுவாயினும் சிங்கப்பூரில் அனைவரும் செல்வந்தர்களாகவோ வாழ்க்கையில் வெற்றிபெற்றவர்களாகவோ திகழலாம் என 80 விழுக்காட்டினருக்கும் மேற்பட்டோர் நம்புகின்றனர்.

**விளம்பரம்**

இதற்கிடையே சீனர் அல்லாதவரைப் பிரதமராகவோ அதிபராகவோ தெரிவுசெய்வதில் சிங்கப்பூரர்கள் மேலும் திறந்த மனப்போக்கைக் கொண்டிருப்பதாகத் தெரியவந்தது.

- **"சிங்கப்பூரின் பிரதமராக இந்தியச் சிங்கப்பூரரை ஏற்றுக்கொள்வேன்"**

  2020 - 70.5%

  2016 - 64.3%

- **" சிங்கப்பூரின் பிரதமராக மலாய்ச் சிங்கப்பூரரை ஏற்றுக்கொள்ளவேன்"**

  2020 - 69.6%

  2016 - 60.8%